
ரூ. 5.00

மக்கள் சிந்தனை

தமிழ் ஆண்டு 2039
மார்கழி - டிசம்பர் 2008

சாதிமத, அரசியல்
மாச்சரியங்களை மறந்து
நாம் இந்தியர் என்று
ஒன்றுபட வேண்டும்.



சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ. 5-00
ஆண்டுச் சந்தா	ரூ. 60-00
ஆயுட் சந்தா	ரூ. 600-00
புரவலர் கட்டணம்	ரூ. 1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ் ஆண்டு 2039	மாதம் : மார்கழி
மணி : 23	இதழ் : 12

வேரோடு வீழ்த்துவோம்!

இந்தியா விடுதலைபெற்று அறுபதாண்டுகள் கடந்து விடுதலை மணி விழாக் கொண்டாடுகின்ற தேசத்தில், 59 ஆண்டுகள் குடி அரசாய்ப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் தேசத்தில் ஆட்சி நிர்வாக எந்திரம் நாணித் தலை குனியும் வண்ணம், பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. எல்லாம் வெட்கக்கேடு!

காக்கவேண்டிய காவல்துறை, உஷாராய் இருக்க வேண்டிய உளவுத் துறை என அரசின் அனைத்துத் துறைகளும் செயல் இழந்து விட்டனவோ! என நம்பிக்கை குறைந்த நிலையில் நம்மைச் சிந்திக்கச் செய்கின்றது! இந்தியாவின் வணிகத் தலைநகரம் எவ்வளவு கொடூரத் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கின்றது? கடல்வழி மார்க்கம் எவ்வளவு பாதுகாப்பாய் உள்ளது? எந்த தேசமும் பயங்கரவாதத்தை, தாங்கிப் பிடித்தல், கருப்பை நெருப்பை சுமப்பது போன்றது! தீயை எதிர்த்துப் போராடாமல் கூட இருந்து விடலாம்! தீமையை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும்! எல்லைப் பகையை, புறப்பகையை, எதிர்த்துப் போராடுவதை விட, உட்பகையை எதிர்த்துப் போராட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்! சாதி, மத, அரசியல் மாச்சரியங்களை மறந்து நாம் இந்தியர் என்று ஒன்றுபட வேண்டிய தருணம் இது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மகாமந்திரத்தை உலகிற்கு அளித்தவன் தமிழன்! "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற ஒப்பற்ற திருமந்திரம் தமிழன் உலகிற்கு வழங்கிய ஞானக்கொடை. இன்று அண்டை நாட்டில் பயங்கரவாதக் குடிஇருப்பு, குடிசைக்குள் படுத்துக் கொண்டு மேற்கூரைக்கு நெருப்பு வைப்பது போலத்தான்! உச்சிக்கிளையில் இருந்து கொண்டு வேரை வெட்டுவதற்கு சமம்!

வன்முறை இருபுறம் கூரிய கத்திபோன்றது. உலக வரைபடத்தில் மிகச் சிறிய நாட்டின்மீது வல்லரசு மிகப்பெரிய அழிவைத் தேடித்தந்தது. செருகளத்தில் சந்தித்த அந்த வல்லரசை தொழில் வணிகத்தில் தான் சந்திப்பது என்று முடிவு எடுத்தது. அடுத்த சில ஆண்டுகளில் எந்தப் பொருளை உலகத் தொழில் சந்தையில் எடுத்தாலும் "Made in Japan", "Made in Japan" என்று பொறிக்கப்பட்டிருந்தது. மிகப்பெரிய வல்லரசை வீழ்த்திய தேசத்தின் செயல்பாடுகள் உலகத்தின் உன்னத இடத்திற்கு கொண்டு போய்ச் சேர்த்தது!

"யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது"

என்றான் கம்பன்.

வீட்டுக்கும் வீட்டுக்கும் இடையே உள்ள சுவர்கள் இடிபட்டு, வீதிக்கும் வீதிக்கும் இடையே உள்ள திரைகளை விலக்கி நாட்டோடு நாட்டை இணைப்போம்!

இந்தியா ஒரு அகிம்சை தேசம்! அதுவே அதன் ஆன்மபலம்! அது பயங்கரவாதத்தின் பார்வையில் கோழைத்தனமாகக் கருதப்படுமே ஆனால், பயங்கரவாதத்தின் மீதான அணுகுமுறை மறு ஆய்வு செய்யப்படவேண்டும்! துப்பாக்கியைக் கையில்

எடுத்துக் கொண்டு, கண்மூடித்தனமாக, எந்தத் தொடர்பும் இன்றி மனித உயிர்களைப் பலிவாங்கும் வெறியர்களின் முன்பு உபதேசங்கள் எடுபடா! முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்! கொசுவை ஒழிக்கக் கொசுமருந்து அடிப்பது போல சாக்கடையை அழிக்க வேண்டும்.

தேசத்திற்குள் இருதுருவங்கள்! வறுமையும், செல்வமும்! ஒரு நகரத்திற்குள் நட்சத்திர விடுதிகளும், சேரிக்குடிசைகளும்! பொது நிறுவனங்களின் வீழ்ச்சி! தனியார் நிறுவனங்களின் வளர்ச்சி! மதம், சாதியைப் பயன்படுத்தும் வாக்கு வங்கி அரசியல்! ஊழலின் ஊற்றுக்கண்ணாய் நிர்வாக இயந்திரம்! இவையெல்லாம் அடியோடு மாற்றப்படும் பொழுதுதான், ஜனநாயகத்தின் உண்மையான அணுகுமுறை, பணநாயகத்திலிருந்து விலகி உண்மையான மக்களால் மகளுக்காக உருவாக்கப்பட்ட மக்களின் ஆட்சி மலரும்! பயங்கரவாதத்தை வலிமைமிக்க ஆயுதங்களாலும், நவீன பயிற்சிகளாலும் எதிர்கொள்வதோடு, பயிருக்கு பாய வேண்டிய நீர், விழலுக்கு செல்லாமல் பாதையை மாற்றுவதுபோல், ஜனநாயகத்தின் வேர்களுக்கு நீர் பாய்ச்சி உரமிட்டு பயங்கரவாதம் எனும் களைகளை வேரோடும், வேர் அடி மண்ணோடும் வெட்டிச்சாய்ப்போம்!

பாதுகாப்பான ஜனநாயக இந்தியாவை உருவாக்குவோம்!

நமது நிகழ்கால மற்றும் எதிர்கால உறவுகளுக்கு ஆபத்தேற்பட்டிருக்கிறது. இந்த உறவுகளின் அடிப்படைகளே ஆட்டம் கொடுக்கின்றன.

- ஜவகர்லால் நேரு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

94. சூது

சூது என்பது பணத்தை மையமாக வைத்து விளையாட்டின் வழியும் பிறவழிகளிலும் மற்றவர் பணத்தைக் கவர்தல். சூது உழைப்பினைக் கெடுக்கும். பகை வளர்க்கும்; பண ஆசையைத் தூண்டும். சூதாடல் தீய பழக்கம். பரிசுச் சீட்டுக்கள் வழிப் பொருள் தேடுதல் கூடச் சூதுதான்.

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. *(931)*

சூதாட்டத்தினை விரும்ப வேண்டாம். வெற்றிபெற்ற சூழ்நிலையிலும் சூதாட்டத்தினை விரும்ப வேண்டாம். தூண்டிலின் இரையால் மறைந்த நுனி இரும்பை இரையென மீன் கருதி விழுங்கித் துன்புறுவது போலச் சூது பொருளிழப்பைத் தரும்.

சூதில் காலம், அறிவு, உழைப்பாற்றல், பொருள் அனைத்தையும் இழப்பதால் "வேண்டற்க" என்று ஐயத்திற்கிடமின்றிக் கூறினார்.

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. *(932)*

ஒன்றினைப் பெற்று நூறினை இழக்கும் சூதாட்டத்தை விரும்புபவர்களுக்கு நல்லன எய்தி வாழும் வழியும் உண்டோ?

ஒன்றினைப் பெறுதலும் நூறினை இழத்தலும் ஒருசேர நிகழாமல் சுழற்சி முறையில் நிகழ்தலால், ஒன்றினை அடைந்தவுடன் மேலும் அடைவோம் என்ற நம்பிக்கையிலேயே சூதாடுபவர்கள் முனைவார்கள்.

உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். *(933)*

உருளும் சூதாடும் காயினை ஓயாது கூறிச் சூதாடுவோரின் பொருள், பகைவரிடத்திற்குப் போய்த் தங்கும்,

சூதாட்டத்தில் ஈடுபட்டமையால் பொருளைப் பேணுதலும் பொருளை ஈட்டலும் செய்யாமையின் பகைவரிடத்திலே குவியும் என்றார்.

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில். (934)

அவமானம் தரக்கூடிய பலவற்றைச் செய்து சிறப்பினை அழித்து வறுமையைத் தருவதில் சூதினை நிகர்த்தது ஒன்றில்லை.

"சிறுமை" – மதிப்பிழக்கச் செய்யும் தன்மை.
"சீரழித்தல்" – பெருமைக்குரிய குணங்களை அழித்தல்.
"வறுமை" – பொருளிலும் பணியிலும் வறுமை.

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். (935)

சூதாட்டத்தை மேற்கொண்டொழுகியவர்களில் கெடாதவர் யாராவது உண்டா? (கெட்டுப் போவார் என்பது கருத்து).

"சூதாடுவோர் கழகம்" சூதாடும் அவாவினைத் தூண்டி வளர்க்கும் எனபதே உண்மை. தனியே இருப்பவர் ஒரோவழி திருந்த வாய்ப்புண்டு.

அகடாரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
முகடியான் மூடப்பட் டார். (936)

சூதென்னும் மூதேவியால் கவரப்பட்டவர்கள் வயிற்றுக்குச் சோறும் உண்ணார்; அல்லலிலும் உழலுவர்.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். (937)

சூதாடும் வழக்கத்திற்கு பழகுதல் பழகிய செல்வத்தினையும் பண்பினையும் கெடுக்கும். "பழகிய செல்வம்" – என்பதால் வழி வழியாகவும், இளமைக் காலம் தொட்டும் உரிமை பூண்டு உழைத்து ஈட்டிய செல்வம் என்று கொள்க.

பொருள்கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது. (938)

சூது, பொருளைக் கெடுக்கும்; பொய்யை மேற்கொள்ளச் செய்யும்; அருளைக் கெடுக்கும்; அல்லலில் உழலச் செய்யும். பொருள் இழத்தலால் – வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைக்குப் பொய் கூறலும், பொய்

பல சொல்லியும் பொருள் கிடைக்காது போயுழிக் களவு, கொலை மேற்கொள்ளுதலால் அருள் கெடுத்து என்றும், களவு, கொலைப் பழக்கத்தால் பெறும் துன்பத்தை அல்லல் என்றும் முறைப்படுத்திக் கூறிய அருமை அறிக.

ஒன்றிற்கு ஒன்று காரணமாதல் அறிக.

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். (939)

ஒருவன் சூதினை மேற்கொள்ளின் அவனை உடையும் செல்வமும் உணவும் புகழும் செல்வமும் கல்வியும் என்ற பேறுகள் ஐந்தும் வந்து பொருந்தாது. ஒளி என்பதற்கு உடல் – முகப்பொலிவு என்றும் பொருள் கெள்ளலாம்.

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர். (940)

சூதில் பொருளை இழக்கும் தொறும் திரும்ப இழந்த பொருளைப் பெற முடியும் என்று சூதினை விரும்புவதைப் போல, உடம்பு துன்பத்தில் கிடந்து உழன்றாலும் உ. `ருக்கு உடம்பின் மீது உள்ள பற்று நீங்காது.

"திருந்துமாறு அரிது" என்பது கருத்து.

(தொடரும்)

அருள் உரைகள்

1. ஒரு வினாடிப் பொறுமை பத்து வருடச் சுகம்.
2. குறைந்த ஆசை – இன்ப வாழ்க்கை.
3. முகத்தில் புன்சிரிப்பில்லாதவன் கடைதிறக்கக் கூடாது.
4. கோபத்தால் சாதிப்பதை விட பொறுமையால் ஒருவன் அதிகம் சாதிக்கிறான்.
5. கணக்கு எழுதாதவனுடைய நிலைமை கழுதை புரண்ட இடம் மாதிரி.
6. வாயும், கையும் சுத்தமாக இருந்தால் உலகம் முழுவதும் செல்லலாம்.
7. பொருளைத் தேடுவதைக் காட்டிலும் தேடிய பொருளைக் காத்து நல்வழியில் பயன்படுத்துவது சிறந்ததாகும்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கைநெறி

(புலவர். **ச.மு. விமலானந்தம்**)

9. ஈதல் இசைபட வாழ்தல்

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்றும்,

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்"

என்றும் வான்புகழ் வள்ளுவர் ஈகையைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளார். மேற்காணும் குறட்பாக்களுக்கேற்ப வாழ்ந்தவர் சிறப்புலிநாயனார். அவர் சோழநாட்டு ஊரான திருவாக்கூரில் அந்தணர் குலத்தில் தோன்றினார். அவர் தம்மிடம் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்னாது கொடுத்து வந்தார். அதுதான் உயர்குடிப்பிறப்பின் பண்பு என வள்ளுவர் கூறுகிறார்; அவர் குறள் வருமாறு :

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள"

இந்த நற்பண்பைச் சேக்கிழார்,

"இன்மையால் இரந்து சென்றோர்க் கில்லை என்னாதே ஈயும்
தன்மையார்"

என்று பாடுகிறார்.

சிறப்புலி நாயனார் சிவபெருமானைச் சிந்தையில் இருத்திச் சிவனருள் பெற்றுச் சிவனடி சேர்ந்தார். எல்லா நாயன்மார்களுமே தம்மிடம் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று கூறாமல் இன்முகத்தோடு ஈந்து வந்தனர்.

ஈத்துவக்கும் இன்பத்திற்கு இணை ஏது? நாமும் நாயன்மார்களைப் போல் நம்மிடம் வந்து கேட்போருக்கு நம்மாலான பொருள் தந்துதவி பொன்றாப்புகழ் பெறுவோமாக!

(தொடரும்)

தமிழ்ப் பாக்களின் பல வடிவங்கள்

(மூத்த தமிழறிஞர். பெரும்புலவர். **ப. அரங்கசாமி**)

கூடைப்பாட்டு, திருவிருக்குக்குறள், ஈரடி மேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு, திருமுக்கால், எழுகூற்றிருக்கை, திருவிராகம், ஏகபாதம், மொழி மாற்று, மாலை மாற்று எனப் பல வடிவங்கள் :

கூடைப்பாட்டு

இது கூடைக்கவி, கூடைச் செய்யுள் என்றும் கூறப்படும். சொற்செறிவும் இசைச்செறிவும் உடைய நான்கடிப் பாடலில் உள்ள இரண்டாம் அடியே மூன்றாம் அடியாக மடக்கிவரப்பாடுவது. இரண்டாவது அடியே மூன்றாம் அடியாக அமைதல். இது மூன்றடிப்பாட்டு என்றும் கொள்ளப்படும்.

இலக்கணம்

கூடை என்பது கூறுங் காலை
நான்கடி யாகி இடையடி மடக்கி
நான்கடி அஃகி நடத்தற்கும் உரித்தே
(அஃ-சுருங்கி, குறைந்து) - சிலம்பு அடியார்க்கு நல்லார் உரை.

எடுத்துக்காட்டு - சிலம்பு கானல்வரி கடற்கரையில் கோவலனைப் பிரிந்த மாதவி கூற்று.

புள்ளியன்மான் தேராழி போன வழியெல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்மற் றெம்மோடீங்(கு)
உள்ளாரோடு உள்ளாய் உரையாய்மற் றென்செய்கோ

(இதில் இரண்டாவது அடி மடக்கி மூன்றாவது அடியாக வந்துள்ளதைக் காண்க)

திருவிருக்குக்குறள்

ஈரசைச் சீர்கள் நான்குடைய அடிகள் இரண்டிரண்டாய் அமையப்

பாடுவது. இதில் ஒவ்வொரு பாட்டிலும் பாட்டுடைத் தலைவன் பாடுபொருள் பெயர் இடம் பெற வேண்டும்.

1. வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே
2. இறைவ ராயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குவீர்
3. செய்ய மேனியர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே.

– ஞானசம்பந்தர் தேவாரம் – திருவீழிமிழலை

எழுகூற்றிருக்கை

1 முதல் 7 எண்களை ஏறுமுகமாகவும், 7 முதல் 1 வரை இறங்கு முகமாகவும் எண்களைப் பொருள் குறிக்குமாறு அமைத்துப் பாடல் இயற்றுவது.

1-4,5,6,8 என்று எண்கள் அமைத்துப் பாடுவதும் உண்டு.

1 முதல் 5 வரை ஏறுமுகமாக எண்கள் அமைத்தல்

"ஒருநாள் ஈரயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்"

– ஞானசம்பந்தர் தேவாரம்.

7 முதல் 1 வரை இறங்குமுகமாக எண்கள் அமைத்தல்

ஏழூர்நல் விழாக்காணும் திருவை யாற்றில்
இருப்போர்தாம் ஆறுபெரும் சமயம் சொல்வர்
ஆழ்புலன்கள் ஐந்தினையும் அடக்க வல்லார்
அருளாளர் நால்வர்திரு முறைகள் நன்றே
காழ்கொள்ள உளமதனில் பதியக் கற்பர்
கருதரிய மூன்று பொருள் உண்மை ஓர்வர்
ஊழ்வினைகள் இரண்டினையும் ஒதுக்க மாட்டார்
ஒருலகாய் அண்டத்தைக் காண்பார் தாமே...(ப.அ)

இதில் 7-1 எண்கள் இறங்குமுகமாக அமைந்துள்ளதைக் காண்க.

திருமுக்கால்

ஈரசைச்சீர் நான்குடைய, நான்கடிகள் கொண்ட பாட்டில் 1,3

அடிகள் நான்கு சீர்கள் பெற்றும், 2,4, அடிகள் மூன்று சீர்கள் பெற்றும் வருமாறு பாடுதல்.

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய......4 சீர்
படமலி அரவுடை யீரே..... 3 சீர்
படமலி அரவுடை யீருமைப் பணிவர்....... 4 சீர்
அடைவதும் அமருல கதுவே........ 3 சீர்

– ஞானசம்பந்தர் தேவாரம்

ஈரடி மேல்வைப்பு

ஒரு பாட்டில் ஈரசைச்சீர் நான்குடைய இரண்டடிகள் ஒரு பொருளைக் குறிப்பதாக மேலேவைத்து, அதற்குக்கீழே அப்பொருளைக் குறிப்பதாக நாலசைச் சீர் கொண்ட இரண்டடிகள் அமையப் பாடுவது.

தக்கன் வேள்வி தகர்ந்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல் } மேல்வைப்பு
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தாமே } கீழ்வைப்பு

– ஞானசம்பந்தர் தேவாரம்

நாலடி மேல்வைப்பு

ஈரடி மேல்வைப்புக்குச் சொன்ன முறைப்படி முதலில் மேலே நான்கடிப் பாடலும், பின்னர் கீழே இரண்டடிப் பாடலும் அமையப் பாடுதல்.

நாலடி மேல்வைப்பு {
வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதம் இல்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
}
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம்ஆதியே

– ஞானசம்பந்தர் தேவாரம்.

திருவிராகம் (முடுக்கிசை)

சந்த ஒலியுடன் சொற்கள் விரைந்தோடுமாறு பாடுதல்.

செஞ்சொலுறு செந்தமிழை எஞ்சலறச் சொல்லி
மஞ்சுமழை என்னபொழி விஞ்சுகவி பாட
வஞ்சிதமிழ்த் தாயெனது கெஞ்சலுக் கிரங்கி
கஞ்சமலர்ப் பிஞ்சடியென் நெஞ்சமிசை வைப்பாய்

(ப.அ)

ஏகபாதம்

நான்கடிப் பாட்டில் முதலடி போலவே எல்லா அடிகளும் அமையப் ப ாடுதல். ஆனால் ஒவ்வோரடியிலும் உள்ள சொற்கள் ஒரே மாதிரியாக இருந்தாலும் அவை பொருளுக்கேற்பப் பிரித்து - சேர்த்துப் பொருள் காணவேண்டும்.

பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்.

- ஞானசம்பந்தர் தேவாரம்.

இதில் பெம்மான் எம்மான் என்ற சொற்கள் அடிதோறும் வெவ்வேறு வகையில் பிரிந்து பொருள் வேறுபட நிற்கும்.

மொழி மாற்று

இது மிறைக்கவி என்றும் கூறப்படும். ஒரு பாட்டில் சிதறிக் கிடக்கும் சொற்களை, ஒன்றற்கொன்று தொடர்புடைய பொருளைக் குறிக்குமாறு சொற்களைத் தேர்ந்து அமைத்தல்.

உரித்தது பாம்பை உடல்மிசை இட்டதோர் ஒண்களிற்றை
எரித்ததோர் ஆமையை இன்புறப் பூண்டது முப்புரத்தை
செருத்தது சூலத்தை ஏந்திற்று தக்கனை வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு விலவீற் றிருந்தவரே

- ஞானசம்பந்தர் தேவாரம்.

இப்பாட்டில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கேற்பத் தேர்ந்து சேர்த்துப் பொருள் காண வேண்டும்.

உரித்தது களிறு, உடல்மிசை இட்டது பாம்பு, எரித்தது முப்புரம், ஏந்தியது சூலம், பூண்டது ஆமை, செருத்தது தக்கன் வேள்ளி - இவ்வாறு பொருளுக்கேற்ப மொழிகளை மாற்றியமைப்பதால் மொழிமாற்று என்ற பெயர்.

மாலைமாற்று

ஒரு பாட்டில் உள்ள இரண்டு அல்லது மேற்பட்ட அடிகளை இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் படித்தால் ஓரடியைப் போலவே எல்லா அடிகளும் அமையப் பாடுதல்.

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா

– ஞானசம்பந்தர் – தேவாரம்

திருவியமகம் (யமகம்)

அடிதோறும் ஈற்றுச்சீர்கள் மடக்கி வருவதோடு அச்சொற்கள் இரட்டுற மொழிதலாக (இருபொருள்தருமாறு) அமைதல் வேண்டும்.

பாயு மால்விடை மேலொரு பாகனே
பாவை தன்னுரு மேலொரு பாகனே
தூய வானவர் வேதத் துவனியே
சோதி மாலெரி வேதத் துவனியே
ஆயு நன்பொருள் நுண்பொருள் ஆதியே
ஆல நீழல் அரும்பொருள் ஆதியே
காய வின்மதன் பட்டது கம்பமே
கண்ணு தற்பர மற்கிடங் கம்பமே.

– ஞானசம்பந்தர் – தேவாரம்

இதில் "பாகனே" என்ற சொல் திருமாலைக் காளை வாகனமாகக் கொண்டு ஓட்டுபவனே (பாகன்) என்றும், உமையைத் தன் உருவத்தின் மேல் ஒரு பாகமாக உடையவனே என்றும் இருபொருள்பட அமைந்துள்ளது.

இவ்வாறே துவனி, ஆதி, கம்பம் என்ற சொற்கள் இருபொருள்பட அமைந்திருப்பதை அறிக. விரிப்பின் பெருகும்.

திருப்பாசுரம்

ஒரு பதிகத்தில் (10–12 பாக்கள் அடங்கியது) முதல் மூன்று பாடல்கள் ஒரு சந்தமாகவும் (ஓசை) அடுத்துவரும் ஏனைய பாடல்கள் வேறொரு சந்தமாக அமையுமாறு பாடுதல்.

ஞானசம்பந்தர் புனல்வாதத்தில் ஏட்டில் எழுதிய பதிகம் 12 பாடல்களில்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே

என்ற பாடலும் அடுத்துள்ள 2,3வது பாடல்கள் ஆகிய மூன்று பாடல்களும் ஒரு சந்தமும், 4 முதல் 12 முடிய 9 பாடல்களும் வேறு சந்தமும் உடையதாகப் பாடியுள்ளதை அறிக.

பல்பெயர்ப் பத்து

ஒருவருக்கோ, ஓர் ஊருக்கோ, ஒரு பொருளுக்கோ உள்ள பல பெயர்களை ஒருங்கமைத்துப் பாடுவது. சீகாழிக்குரிய பன்னிரண்டு பெயர்கள் ஒருங்கமைந்த பாடல்.

"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"

– பெரியபுராணம்

இப்பாட்டில் சீகாழிப் பதிக்குரிய 12 பெயர்கள் ஒருங்குடன் கூறப்பட்டுள்ளன.

அறியாமை என்பதற்கு, ஒன்றும் தெரியாமை என்பது பொருளன்று. தத்துவ உலகில் அறியாமை அதாவது நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும் அறிதல் என்பதாகும். இந்த அறியாமை நீங்குதல் வேண்டும். நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் பகுத்து அறிகின்ற அறிவுத்திட்பம் தேவை. தீமையை விட்டொழித்து விலகுவதற்கும் தீமையை எதிர்ப்பதற்கும் துணிவு தேவை.

- அருள்நெறித்தந்தை

அருளாலய பங்குச்சந்தை

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

பணம்போட்ட முதலீட்டின் பங்குச் சந்தை
பளபளப்பாய் பலன்தந்த காலம் மாறி
மணமின்றிப் பளபளக்கும் காகி தப்பூ
மணக்காத வாறாக மதிப்பி ழந்து
கணவான்கள் கவலையுற கால மெல்லாம்
கணக்காகப் பொருள்சேர்த்த நடுவர்க் கத்தார்
பணஏற்ற இறக்கத்தால் பாதிப் புற்றே
பரிதவித்த வாழ்க்கையுமே பெற்றா ரந்தோ!

அமெரிக்க வங்கிகளின் முடக்கத் தாலும்
அகிலப்பொரு ளாதார மாற்றத் தாலும்
அமுங்கிவிட்ட நீர்மூழ்கிக் கப்பல் அந்த
அலைகடலின் ஆழத்தில் போனா லும்மே
அமுங்கிவிடும் பிறகப்பல் போல அன்றி
அருங்கடலின் மேல்பரப்பில் பிறகு தானும்
அமைதியான அறுகம்புல் துளிர்ப்பைப் போல
அடுத்தடுத்துக் கண்டிடலாம் அதுபோல் நாளும்;

தங்குதடை யின்றிவளர் பங்குச் சந்தை
தரணியிலே பெருவீழ்ச்சி யுற்றா லும்மே
கங்கினையே ஊதிபெரு நெருப்பாய் மாற்றும்
கருத்தான வர்த்தகநல் முன்னேற் றத்தால்
எங்குமிலா சென்சஸ்குறி யீட்டம் பெற்றே
இயல்பான புள்ளிகளை உயர்த்தும் போது
பங்குகளை விரைந்திங்கே விற்போ ரெல்லாம்
பதுங்கிப்பாய் புலிபோலப் பயனைக் கொள்வார்.

தேசியக்குறி யீட்டெண்ணின் இறக்க ஏற்றம்
    தெளிவின்றிக் கட்டுக்குள் இலையென் றாலும்
ஆசியாவின் பங்குகளும் அவ்வா றாக
    அலைமோதித் தலைசாய அந்தோ மும்பை
நேசமிகு நகரத்தின் வர்த்த கந்தான்
    நிலையென்று பலபேரும் நம்பும் வேளை
நாசமிகு பயங்கரவா தத்தி னாலே
    நலிந்திடுமோ என்றச்சம் வருதே அம்மா!

மண்தோண்டி எடுக்கின்ற பெட்ரோல் மற்றும்
    மதிப்பான டீசலொடு கச்சா எண்ணெய்
கண்ணான எரிவாயு போன்ற எல்லாம்
    கணக்காக விலையிறக்கம் கண்டிட் டாலும்
விண்ணுயர வேதாளம் முருங்கை யேறும்
    விலையேற்ற பரமபத ஆட்டந் தன்னில்
திண்ணியஅவ் ஏணிதனில் ஏறும் காய்போல்
    திடுமெனவே விலையேறும் என்ப துண்மை!

தரித்திரமே இல்லாமல் தங்கந் தன்னின்
    தடையில்லா விலையேற்றந் தன்னைக் காட்டிச்
சரித்திரமே காணாத வாறு, பங்குச்
    சந்தையுமே சரிவதிலை! அதற்கு மாறாய்
உரித்தான பலவற்றின் கார ணத்தால்
    உயர்பங்குச் சந்தையதன் வர்த்த கந்தான்
நரித்தனமாய் எழுச்சிவீழ்ச்சி நாளும் நாளும்
    நடப்பதைத்தான் நிலைப்படுத்த வருவா ருண்டோ!

என்றேநான் எண்ணியெண்ணி உறங்கும் வேளை
    எழிலார்ந்த வெண்தாடி வேந்த ராகக்
கன்றெண்ணி வருகின்ற பசுவைப் போலக்
    கனைத்திட்ட குரலோடே என்முன் வந்து
பொன்றுதற்கே எந்நாளும் வழியே இல்லை
    பொல்லாத பேராசைச் சூதாட் டத்தைக்
கொன்றுவிட்டால் கேடின்றிப் பங்குச் சந்தை
    கொலுவிருந்து கோலோச்சும் என்றா ரம்மா!

உண்மையிது! உண்மையிது! புத்தர் சொன்ன
உள்ளார்ந்த பேராசைப் பேயென் கின்ற
கண்மயக்கம் ஒன்றாலே காசினி வாழ்வு
கலக்கமுறக் காண்கின்றோம்! தாயு மானார்
புன்மயக்க ஆசைக்கோர் அளவே இல்லை
புவனமெலாம் கட்டியுமே ஆண்டிட் டாலும்
மன்மயக்கம் நீங்கிடுமோ? என்றார்! அந்த
மயக்கந்தான் நீங்கிவிட்டால் பங்குச் சந்தை

மரணமிலாப் பெருவாழ்வை எட்டும் என்ற
மகத்தான உண்மையினை உணர்ந்தெ முந்தே
கரமதனைக் குவித்தேதான் அருளா லயத்தின்
கரசேவை கூட்டத்தார் கூடி யுள்ள
உரமான பைந்தமிழின் பக்திப் பாங்கில்
உறவாடி மகிழ்தலொன்றே நாம்கேட் கின்ற
வரமான அருளாலய பங்குச் சந்தை
வைப்புநிதி என்றேநான் வணங்கி னேனே!

அறியாமையுடையோர் திருந்த வாய்ப்புண்டு; செய்த பிழையைத் திருத்திக்கொள்ளும் பாங்கின் மூலம் திருந்த வாய்ப்புண்டு. ஆனால், புல்லறிவாண்மையுடையோர் திருந்தார். தானும் திருந்தாமல் பிறரையும் துன்பக் கடலில் ஆழ்த்துவது புல்லறிவாண்மை. பிழையை - தவற்றை ஒத்துக்கொள்ளாமல் சரியானது என்று வாதிடுதல் புல்லறிவாண்மை. பேயினும் கொடியது இது. தவற்றைத் திருத்திக்கொள்ளாமல் இடித்து உரைப்போர் கூறியும் தன்னைத் திருத்திக்கொள்ளாமல் அல்லலுறும் மனோபாவம். "தூங்குபவனைத் தட்டி எழுப்பிவிடலாம். தூங்குவதுபோல் நடிப்பவனை எக்காலத்தும் எழுப்ப இயலாது" என்பர். அதுபோல்தான் புல்லறிவாண்மை உடையோன் திருந்துவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவு.

- பொன்னம்பல அடிகளார்

இந்தியா உலகிற்கு அளிக்கும்

(இரா. குறிஞ்சிவேந்தன்)

இவ்வுலகைப் புயல், பூகம்பம் போன்ற இயற்கை நிகழ்வுகள் தாக்கும் சமயத்தில், சமுதாயத்தில் ஒரு வகை பரபரப்பு உருவாகி பரவலாக சில அலைகளை ஏற்படுத்தி ஓய்கின்றன. இந்த அலைகளுள் சில, சமூகத்தின் அடித்தளம் வரை ஊடுருவிச் சென்று குறிப்பிட்ட காலம் வரை பேசப்படுகின்றன. தருமபுரி மாணவிகள் எரிப்பு, கும்பகோணம் தீ விபத்து, ஆழிப்பேரலைத் தாக்குதல் ஆகிய நிகழ்ச்சிகளின் போது தமிழ்ச்சமுதாயத்தின் உணர்வுநிலை உச்சத்தினை எட்டியதைக் கண்டோம். எந்தச் சமூகத்திலும் பேரிடர் நிகழ்வுகள் ஏற்படுத்தும் அதிர்வலைகள் மக்களைப் பாதிப்பது இயற்கையே.

அண்மையில் விபத்தில் சிக்கி மூளை செயலிழந்த ஹிதேந்திரன் என்னும் பசுந்தளிரின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்ட செய்தி தமிழ்ச்சமூகத்தில் மட்டுமல்லாது, இந்தியா முழுக்கப் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இச்சம்பவம் குறித்து தொலைக்காட்சி, பத்திரிகைகள் வழி அறிந்த பலருக்கு உளவியல் ரீதியான பாதிப்புகள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கல் நெஞ்சையும் கரைத்திடும் இத்தியாகச் செயல் உருவாக்கியிருக்கும் உணர்வலைகள் தமிழ்ச்சமுதாயத்தில் பல காலம் எதிரொலித்துக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்த பிஞ்சு உடலில் இருந்த உறுப்புகள் தானம் செய்யப்பட்ட சம்பவம் வெறும் உணர்வுகளை மேலேற்றி விடுவதுடன் நின்று போய்விடக்கூடாது என்னும் எண்ணமே இக்கட்டுரை சொல்ல வரும் செய்தி.

உலகமயமாக்கலின் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக நம் சமுதாயம் எட்டியுள்ள அறிவியல்-தொழில்நுட்ப முன்னேற்றம் அளவிட இயலாதது. உலகின் எந்த மூலையில் இருந்தாலும், நாம் விரும்பியவர்களோடு திரையில் உருவத்தினைப் பார்த்துக் கொண்டே உரையாடும் வசதிகள் பெருகிவிட்டன. வீட்டுக்குள்ளிருந்து கொண்டே

விரும்பியவற்றை வாங்கும் மின்வர்த்தகம் உச்சத்தில் இருக்கிறது. மனிதர்களுக்குப் பதிலாக இயந்திரங்கள் செயலாற்றுகின்றன. உலகமே சுருங்கி உள்ளங்கைக்குள் வந்துவிட்டதாக அறிவியலாளர்கள் இவ்வளர்ச்சியை வருணிக்கின்றனர். உண்மை; நூறு விழுக்காடு ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை. ஆனால் கூடவே ஓசையில்லாமல் உள்ளம் சுருங்கி மானுடம் வீழ்ந்து கொண்டிருப்பதையும் நம் இரு கண்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புறாவுக்கு உடல் தசையை அளித்த சிபியையும், முல்லைக்குத் தேர் ஈந்த பாரியின் வரலாற்றையும் பிழைக்கத் தெரியாதவர்களாகப் பார்க்கும் நோய்ப் பார்வைக்கு இச்சமூகம் ஆட்பட்டுள்ளது. பகிர்ந்துண்டு, பல்லுயிர் வளர்த்தலே உயரிய வாழ்க்கையென உரைத்த ஈராயிரம் ஆண்டு கால வள்ளுவனின் ஞானவாக்கு இன்று வலுவிழந்து நிற்கிறது. மருத்துவத் தம்பதியினர் அசோகன்-புஷ்பாஞ்சலி போன்ற ஒன்றிரண்டுப் பொன்னூசிகளை மட்டுமே வைத்திருக்கும் வைக்கோற் போராகச் சமூகம் மாறியதன் பின்னணி குறித்து ஆத்மப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டிய கடப்பாட்டில் இவ்வுலகம் இருக்கிறது.

ஹிதேந்திரனின் தியாக மரணம் எழுப்பியுள்ளது வெறும் உணர்வுகள் தொடர்பான பிரச்சினை மட்டுமன்று; உள்ளச் சீர்மை குறித்ததும் ஆகும். மனிதனுடைய இறப்புக்குப் பின்னாலும், வாழ்க்கை தொடர்கிறது; உறுப்புகள் தான வடிவத்தில் என்பதைத் தன் உயிரைச் சாட்சியாக வைத்து அப்பாலகன் சென்றிருக்கிறான். ஹிதேந்திரனுக்கு முன்பும் இது போன்ற மகத்துவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஊடகங்கள் பெருகியிராத காலத்தில் நடந்ததால், அச்சம்பவங்கள் வெளியுலகிற்குத் தெரியாமல் போய்விட்டன.

1995-ஆம் ஆண்டு சென்னையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்னும் வாலிபர் விபத்தில் சிக்கி, மூளைச்சாவுக்கு உட்பட்ட போது, அவரின் இளம் மனைவி புதுச்சேரியைச் சேர்ந்த மாலதி தன் கணவரின் இதயம், கண்கள், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகளைத் தானம் செய்தார். சாதாரண குடும்பத்தினைச் சேர்ந்த மாலதியின்

தியாகம், அன்றைக்குத் தினமணி போன்ற நாளிதழ்களில் வெகுவாகப் பாராட்டப்பட்டதுடன், 1995-ஆம் ஆண்டின் சாதனைப் பெண்மணி என்ற பெருமையையும் தேடித் தந்தது. 2008-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உடல் ஊனமுற்ற தன் இரு பெண்களைக் காப்பாற்ற வகையில்லாமல், அவர்களோடு தற்கொலை செய்து கொண்ட சென்னைப் பொழிச்சலூரைச் சேர்ந்த ஒரு தாய், தங்கள் மரண வாக்குமூலத்தில் மூவரின் கண்களையும் தானமாக எழுதி வைத்திருந்தார். சோகத்தின் எல்லையில் ஒப்புக் கொள்ள முடியாத முடிவினை எடுத்த போதும், அத்தாய் செய்த செயல் வணங்குதற்குரியது. இவ்வாறு அகல்விளக்குகளாய் ஒளி விடும் தீபங்களின் வரிசையை ஆங்காங்கே தரிசிக்க இயலுகிறது.

இரத்ததானம் செய்வதற்கே ஆயிரம் முறை சிந்திக்கும் நம் இந்தியர்கள், உறுப்பு தானம் குறித்த செய்திகளை உடனே ஏற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்க இயலாது. உண்மையில், இருப்பவர்கள் அனைவரின் உறுப்புகளையும் எடுத்து விடவும் இயலாது. பூமியில் பிறந்த மாந்தர் அனைவரும் நலமோடும், வளமோடும் வாழ வேண்டுமென்பதே அனைவரின் பிரார்த்தனையாகும். ஆனால் விபத்துகள் என்பது தவிர்க்க இயலாததாகி விட்ட இந்நாளில், மூளை செயலிழந்தவர்களின் உறுப்புகளைத் தக்க மருத்துவக்குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் தானமளிப்பதற்கு நம் சமுதாயம் முடிவெடுக்கலாமே! காலன் பறித்த உயிரைக் காலகாலத்துக்கும் நாம் வாழ வைக்கலாமே!

இன்றைய தேதியில், இதய மாற்று அறுவை சிகிச்சைக்காகக் காத்திருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை பல ஆயிரங்களாகும். அதில் பெரும்பகுதியினர் பால்மணம் மாறாத குழந்தைகள் என்பது நம்மைச் சுடும் நிஜம். அது போன்று சிறுநீரக தானம் வேண்டி உயிருக்குப் போராடும் நிலையில் காத்திருப்போரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாகும். ஆனால் தானமாகத் தருவதற்கு முன் வருபவர்கள் 2000-த்திலிருந்து 3000 வரை மட்டுமே. அவ்வாறு தரும் மனிதர்களில் கணிசமானோர் வறுமையின் காரணமாக விற்பவர்கள் என்ற அதிர்ச்சித் தகவலும் கிடைத்துள்ளது.

பொதுவாக, விபத்தினால் இறப்போரின் எண்ணிக்கை உலகிலேயே இந்தியாவில் தான் அதிகம். அவ்வாறு விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்த மனிதர்களின் உறுப்புகளையே தானமாக மருத்துவ உலகம் எதிர்பார்க்கிறது. ஒன்றன் முடிவுரையிலிருந்து, மற்றொரு முன்னுரையைத் தொடங்கும் முயற்சி இது. அத்துடன், மனித உறுப்புகள் மண்ணுக்கும், தீக்கும் இரையாகாமல் மாற்று உடலில் துடிக்க வைக்கப்பட வேண்டும் என்ற தாகத்தின் அடிப்படையிலும் இதை உணர்ந்து கொள்ளலாம்.

வெறும் 4.60 கோடி மக்கள் தொகை கொண்ட ஸ்பெயின் நாட்டில் உறுப்பு தானம் செய்வோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு 14,500 ஆகும். ஆனால் 100 கோடிக்கும் அதிகமான மனிதர்களைக் கொண்ட இந்தியாவிலோ உறுப்புகளைத் தானமாகத் தருவோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு 30 முதல் 40 வரை மட்டுமே. மனிதர்களின் உடல் உறுப்பு தானத்தினை எந்தச் சமயமும் தடை செய்யவில்லை. மனிதனின் ஆன்மா மட்டுமே இறுதி வரை உயிர்ப்புடன் இருப்பதாக சமயங்கள் கூறுகின்றன. உறுப்புகளைப் பயன்படுத்துவதற்கு அவை தடையேதும் கூறவில்லை.

விபத்தினைச் சந்திக்கும் மனிதர்களின் குடும்பத்தினர் மட்டுமல்லாது, பொதுவாகவே உடல் உறுப்புகள் தொடர்பாக அனைத்துத் தரப்பு மக்களிடமும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். உடல் கொடையாளர்கள் ரவிச்சந்திரன், ஹிதேந்திரன் என அனைவரின் விஷயத்திலும் ஒரு தவறு மாறாமல் நிகழ்ந்தது; இன்றளவும் நாடு முழுக்க நிகழ்ந்தும் வருகிறது. அதாவது, விபத்தினைச் சந்தித்தவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் விஷயத்தில் ஏற்படும் தாமதம். இன்று நாட்டில் ஒவ்வொரு நாளும் நிகழும் விபத்துக்களில், பெரும்பாலானவர்கள் மரணத்தினைத் தழுவக் காரணம், மருத்துவமனைக்குக் காலதாமதமாகக் கொண்டு செல்வதேயாகும். அடிபட்டவருக்கு உதவினால் காவல்நிலையம், நீதிமன்றம் என அலைக்கழிக்கப்பட்டோரின் முன் அனுபவங்களும் இதற்கு முக்கியக் காரணமாகும். விபத்தினை ஏற்படுத்துபவர்களை விட, விபத்து ஏற்பட்டவருக்கு உதவி செய்தவருக்குக் கிடைக்கும்

அலைக்கழிப்பு தண்டனை மனிதநேயத்திற்கு ஒட்டு மொத்தமாகக் குழி பறிக்கும் செயலாகும். இவ்விஷயத்தில் அரசும், தன்னார்வ நிறுவனங்களும் இணைந்து சில நடைமுறைச் சிக்கல்களை மாற்றியமைக்க வேண்டும். அதே வேளையில் சட்டத்தினைக் காரணம் காட்டி சாலையில் அடிபட்டு உயிருக்குத் துடித்துக் கொண்டிருக்கும் மனிதர்களைக் கடந்து செல்வது தக்க செயல் அன்று. கண்முன் அடிபட்ட சொந்த உறவுகளை வைத்துக் கொண்டு ஒவ்வொரு வாகனத்தையும் நிறுத்த கைகாட்டிப் போராடும் நிமிடங்கள் மிகவும் வலிகள் நிறைந்தவை.

மனித உடல் உறுப்பு தானத்தினை அரசாங்கத்தின் பொறுப்பில் விட்டுத் தப்பிக்கும் மனநிலையையும் மாற்ற வேண்டும். மானுடம் தொடர்பான இவ்விஷயத்தில் சட்டத்தின் துணையுடன், சமுதாய அமைப்புகளின் வழிகாட்டுதல்களும் முக்கியத் தேவையாகும். திருமடங்கள், பல்வேறு சமய நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள், மாணவச் செல்வங்கள் போன்றோரின் கூட்டு முயற்சியில் மனித உடல் உறுப்பு தானம் தொடர்பான மாபெரும் இயக்கத்தினைக் கட்டுவது பெரும் பயன் தரும். கிராமங்களில் இயக்கங்களைக் கட்டமைத்து வெற்றி கண்ட குன்றக்குடித் திருமடம், சர்வோதய இயக்கங்கள் போன்ற முன்மாதிரி வெற்றியாளர்களிடம் இதற்கான ஆலோசனைகளைப் பெற்றால் வெற்றியுடன் களத்தில் இறங்கலாம்.

நம் நாட்டில் கோடிக்கணக்கில் பணம் குவிந்திராமல் இருக்கலாம்; ஆனால் கோடானுகோடியாக மனிதவளம் பெருகி நிற்கிறது. அதைக் கொண்டு எதையும் சாதிக்கலாம். பாகிஸ்தானிலிருந்து வரும் சிறுவர் சிறுமிகளுக்கு இன்றைக்கு இதய அறுவை சிகிச்சை செய்து வெற்றி கண்டுள்ள நம் மருத்துவ உலகம், மனம் வைத்தால் உறுப்புகளைப் பொருத்தி, வெறுப்பினை எளிதாக வெல்லலாம். அன்பினை வெல்லும் சக்தி இவ்வுலகில் எந்த ஆயுதத்திற்கு உள்ளது? இவ்விஷயத்தில் இந்தியாவும், இந்தியர்களும் மனம் வைத்தால் இதர நாடுகளுக்கு மனிதநேயத் தலைமை ஏற்கலாம். அதன் பிறகு எல்லோரும் சாகாத அமரநிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்களிக்கும்., ஆம் இந்தியா தான் உலகிற்களிக்கும்!

இந்தியத்தாய் தலைநிமிர்ந்தாள்

(மரு. பரமகுரு)

இந்தியத்தாய் பெருமிதத்தால் தலைநி மிர்ந்தாள்;
"என்வயிற்றில் பிறந்தமக்கள் விஞ்ஞா னத்தில்
எந்தவொரு நாட்டினர்க்கும் இளைத்தோ ரல்லர்"
என்றுமனம் பூரித்தாள்! "விண்க லத்தைச்
சந்திரனுக் கேவி,அதன் மீது தங்கள்
தாய்நாட்டு மூவண்ணக் கொடியை வைத்தார்
இந்தியர்"என் றொருசெய்தி சரித்தி ரத்தில்
எழிலார்ந்த பொன்னெழுத்தால் பொறித்தா ரம்மா!

இமயத்தில் தமிழ்வேந்தர் அந்த நாளில்
ஏற்றமுற புலிமீன்வில் கொடிபொ றித்தார் –
தமிழ்நூல்கள் பேசுவதைப் படித்த துண்டு!
தங்கமகன் மயில்சாமி அண்ணா துரையாம்
தமிழ்நாட்டு விஞ்ஞான மேதை, திட்ட
இயக்குநராய்ச் சந்திராயன் தனைஇ யக்கி
இமைதிறந்த படிஉலகம் வியக்க இற்றைக்(கு)
எழில்நிலவில் தேசீயக் கொடிவைத் தான்காண்!

உருள்பூமிப் பந்திருந்து நிலவை நோக்கி
ஒப்பற்ற விண்கலத்தை அனுப்பித் தங்கள்
பெருமையினுக் கடையாளம் செய்த நாட்டில்
பேசுகின்ற ஒருநாடாய், நான்காம் நாடாய்
அரியபுகழ் சேர்த்தனர்தம் மக்க ளென்றே
அகமகிழ்ந்தாள் இந்தியத்தாய்! அடுத்தடுத்து
வரும்சந்தி ராயன்நில வினிலே மாந்தர்
வசிப்பதற்கும் வாகைசெய்யும்! உறுதி யம்மா!

ஊன் உண்ணாமையே உயரிய அறம்

(முனைவர். **த. கோடப்பிள்ளை**)

புலால் உண்ணலைத் திருவள்ளுவர் வெறுக்கிறார்; மறுக்கிறார். புலால் உண்பார்க்கு அருளுணர்வே இல்லை என்பார்; தம் உடம்பை வளர்க்கப் பிறிதோர் உயிரின் உடம்பைத் தின்பார்க்கு எவ்வாறு அருள் இருக்கும்? பாவத்தின் நீங்கிய அறிவினையுடையார் ஒருயிரியின் நீங்கிய உடம்பினை உண்ணார் என்பார். ஆகவே அறிவிலாரே ஊன் உண்பார் என்பதாம். நமக்கோர் நன்மை-நன்று-உண்டாகி நிலைத்தல் வேண்டுமெனின் விலங்கொன்றின் உயிரைக் கொன்று அதனுடம்பை உண்ணாமை வேண்டுமாம்.

உயிரைக் கொல்ல லென்பது பாவமாம். சரி, நம்மைத் துன்புறுத்தும் உயிரைக் கொல்லாமலிருத்தல் முடியுமா; கொசுவையோ, மூட்டைப் பூச்சியையோ கொல்லாமலிருப்போமா? சமண முனிவர் தாம் செல்லும் பாதையை மயிலிறகுகொண்டு கூட்டிக் கொண்டே செல்வாராம்! ஏன்? பாதையில் கிடக்கும் உயிர்-நுண்ணுயிர்-காலால் மிதிபட்டு இறந்துவிடுமே; பாவமாகுமே என்பதாலாம்.

கோவலன், கண்ணகி மதுரை செல்லும் வழியின் இயல்பினைக் கூறும் கவுந்தியடிகள்,

"எறிநீர் அடைகரை இயக்கந் தன்னில்
பொறிமாண் அலவனும், நந்தும் போற்றாது
ஊழடி ஒதுக்கத்து உறுநோய் காணின்
தாழ்தரு துன்பம் தாங்கவும் ஒண்ணா"

என்று அலவனும் நந்தும் காலில் அகப்பட்டு, வருந்தும் துன்பம் தாங்கவும் ஒண்ணா எனக் கூறுவர்.

தம்மையறியாமல் தம்காலிலகப்பட்டுச் சாகும் உயிர்க்கு வருந்தும் அறிவுடையார் தின்பதற்காக ஒருயிரைக் கொல்வரோ?

தம்முயிர்க்கு நலன்தேடி நன்றாம் எனப் பலபொருட்களையும் பல உயிர்களையும் தீயிலிட்டுப் பொசுக்கலாமோ? பொசுக்குகின்றனரே! நெய் முதலான பொருள்களைத் தீயிலிட்டுக் கடவுளர்க்குப் படைத்துப் புண்ணியந் தேடுகின்றாரே! பின்பு, வெந்த ஊனினைச் சுவைத்து உண்கின்றாரே! ஏன்? புண்ணியந் தேடுதற்காக. அதனைத் தேடுதற்குரிய

செய்கைக்கு "வேள்வி" என்று பெயர். வடமொழியில் "யாகம்" என்பர். இவ்வேள்வி செய்தல் தமிழர்தம் பழக்கமன்றாயினும் திருவள்ளுவர் காலத்திலேயே தமிழகத்தில் புகுந்துவிட்டது. மூவேந்தரில் ஒருவரோ இருவரோ வேள்வி செய்து பெருமை கொண்டனர்.

"நெய், விலங்குகள் முதலானவற்றைத் தீயிலிட்டுக் (திருக்குறள்–அறிவியல் அகலவுரை) கடவுளர்க்குப் படைத்தல் வேள்வி செய்தல் ஆகும்". பொற்கோ, "தமிழக வரலாற்றில் திருக்குறள்" என்னும் நூலுள் சொல்லுமாறு. "யாகம் என்ற பெயராலே நிறைய குதிரைகளைப் போட்டு எரித்து அதைச் சாப்பிடுவது வழக்கமாக இருந்தது... அது அசுவமேத யாகம் என்பதாயிற்று" என்பார்.

வேள்வித் தீயில் இடப்படும் கடவுளர்க்குரிய உணவு நெய், நீர், ஆ, ஆடு, குதிரை ஆகியவற்றுக்கு "அவி" எனப் பெயர். ஓமத் தீயில் அவியைச் சொரிவார்கள். அவியாக ஆ, ஆடு, குதிரை ஆகியவற்றைத் தீயிலிடல் கொலையன்றோ? தீயிலிட்டுக் கொன்ற உடலினைச் சுவைத்துத் தின்னல் தகுமோ! அறிவுடையோர் தின்னா ஊனினை வேள்வித் தீயிலிட்டு உண்ணல் தகாதது; வேண்டாதது; பாவச் செயல் ஆகும். ஆகையால் திருவள்ளுவர் வேள்வியில் உயிர்க் கொலையை வெறுக்கின்றார்.

"அவி" பெயராதலால் அவிப்பொருட்களைக் குறிக்கும். அவி என்பது அவிதல், அவித்தல் என்னும் தொழிற்பெயர்ப் பகுதியாம். "தல்" விகுதி நீங்கப் பகுதி மட்டும் பெயராக நின்று அவிந்த, அவிக்கப்பட்ட பொருட்களையும் குறிக்கும்.

மலர்தல் – மலர்
பூத்தல் – பூ
அணிதல் – அணி

என்னுந் தொழிற்பெயர்கள் பகுதி மட்டும் நின்று பெயரென வழங்கல் போல அவிதல் என்னும் தன்வினைத் தொழிற்பெயரும் அவித்தல் என்னும் பிறவினைத் தொழிற்பெயரும் "அவி" எனப் பகுதி மட்டும் நின்றன.

அவிதல் – வேதல்; பாகமாதல்; சூட்டால் வெம்புதல்
அவித்தல் – வேகச் செய்தல்

அவிக்கப்பட்டது "அவியல்" என உணவுப்பொருளாதல் – வழக்கில் இருக்கின்றது.

அவியுணவின் ஆன்றோர் (குறள் 413) – அவியுணவு, வேள்வியில் இடப்படும் கடவுளர்க்குரிய உணவு.

மேலும், அவித்தல் – அழித்தல், அடக்குதல் ஐ ந்தவித்தான் (25) – ஐம்புலன்களையடக்கினான். அவியினும் வாழினும் என் (420) – அவியினும் – செத்தாலும்.

இவ்வாறு பெயராக அமைந்த "அவி"யென்பதைக் கொண்ட குறள்.

அவிசொரிந்த தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று (259, புலான் மறுத்தல்)

என்பதாகும். இதற்குத் "தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும் ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அது நின்ற ஊனை யுண்ணாமை நன்று" எனப் பரிமேலழகர் உரை எழுதுவார். ஏனைய உரையாசிரியரும் இதே கருத்தைத் தருகின்றனர்.

"அவி" யென்பது அவித்துப் படைத்தல் – இளங்குமரனார், திருக்குறள் வாழ்வியல் உரைக்கு – ஒரு முன்னோட்டம்.

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து (694, மன்னரைச் சேர்ந்தொழுகல்)

என்னுங் குறளில் உள்ள, அவித்து ஒழுகல் – தவிர்த்தொழுகுக எனப் பரிமேலழகரும், அடக்கமாக என இளங்குமரனாரும், நீக்கி என மாத்தளை சோமுவும் பொருள் காண்பர். "அவித்து – தவிர்த்து" பொருத்தமாக அமைகின்றது.

மக்கள் வழக்கிலும், "உன் கண்ணு அவிஞ்சு (அவிந்து) போக" என எரிச்சல் பட்டார் பேசுதலையறிவோம்.

"நெய் முதலிய அவிகளைச் சொரிந்து" என்பதில் தீயிலிடப்படும் உயிர்கள் சொல்லப்படவில்லை, எனினும் வேள்வி என்றாலே நெய் முதலாய பொருட்களில் உயிர்களும் அடங்கும். இது,

புலை சூழ் வேள்வி... (மணிமேகலை) என்பதாலும், வேள்விக்காக நிறுத்தப்பட்ட,

"வலையிடப் பட்ட மானே போன்றாங்
கஞ்சி நின்றழைக்கும் ஆத்துயர் கண்டு"

ஆபுத்திரன் விடுவிக்க முயன்றான் என்பதாலும் உறுதிப்படுகின்றது.

"அவிசொரிந்து" என்பதால் அவிப்பொருளாகிய ஆ முதலாய உயிர்கள் என்பதும் "ஒன்றன் உயிர்செகுத்து" என்பதால் அவியாகிய உயிர்களைச் செகுத்து என்பதும் அறியப்படுகின்றன.

திருவள்ளுவர் இக்குறளில் சொல்லும் கருத்து, "புலால் உண்ணாமை" என்பதே "அவி சொரிந்து வேட்டலினும் ஒன்றன் உடம்பை உண்ணாமை நன்று" என்பதே. ஒரு வேள்வி, இருவேள்வி அல்ல. ஆயிரம் வேள்வி! ஆயிரம் வேள்வி செய்து அடையும் நன்மையைவிட ஒன்றன் உயிரைக் கொன்று அதன் உடம்பை உண்ணாமையே நன்றாம். "நன்று" யாதெனின் கொல்லுதல் என்னும் பாவத்தின் நீங்கிக் கொல்லாமையாகிய அறம் வளர, ஊன் உண்ணாமையாகிய மாந்தன் இயல்பு, நீடித்துத் துணை நிற்பது என்பதாம்.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை (328, கொல்லாமை)

என்னுங் குறளுரை விளக்கத்துள், மணக்குடவர் "வேள்வியின் வரும் கொலையும் ஆகாது" என்பார்.

அதனால், வேள்வி நன்றேயெனினும் பரிமேலழகர், திருவள்ளுவர் கருத்தை மறாது, "அவ்வேள்விக்கண் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும் பயனே பெரிதென்பதாம்" என்றார்.

நா.சி.கமலநாதன் என்பாரும் தமது "திருக்குறள் - புதிய - உரை, அறத்துப்பால்" என்னும் நூலுள், "ஒன்றன் உயிரை அழித்து அதனுடைய ஊனைத் தின்னாமல் இருப்பது நன்மை. ஆயிரம் வேள்விப் பயனைவிட அதிகப் பயனைத் தரும்" என்றெழுதுவார். திருவள்ளுவர் பிறிதோரிடத்தும், "கொல்லா நலத்தது நோன்மை" (984) என உயிர்கொல்லாமையைச் சொல்வார்.

உயிர் கொல்லுதலால் வேள்வி வேண்டாம்; ஊன் உண்ணாமையே உயர்வானதென்னும் திருவள்ளுவர் கருத்துக்கு மாறாக,

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின் (560, கொடுங்கோன்மை)

என்னுங் குறள் விளக்கவுரையில் கருத்துத் தருகின்றார் பரிமேலழகர்.

அஃதாவது, பசுக்கள் பால் குன்றியவழி (இக்கருத்தை யாம் மறுத்துள்ளோம் எமது "ஆய்வருங்கலம்" என்னும் நூலுள்)

அவியின்மையானும் அது கொடுத்தற்குரிய மந்திரம் கற்பம் என்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்; ஆகவே, வானம் பெயலொல்லா தென்பதாயிற்று" என மழை பெய்ய வேண்டுமெனின் வேள்வி நடத்தல் வேண்டும் எனப் பொருந்தாக் கூற்று மொழிந்தார்.

மதுரை இளங்குமரனார், "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலினும் ஒன்றன், உயிர்செகுத் துண்ணாமையைப் போற்றுவது திருக்குறள்" என்பார். (திருக்குறள் - வாழ்வியலுரைக்கு ஒரு முன்னோட்டம்) அதே பகுதியில், "வேள்வி : வேள் என்பது விரும்புதல் பொருளது. வேள் வழியாக வந்த சொல்லே வேள்வி. அது "யாக"ப்பொருள் தருவது அன்று; விருந்து என்னும் வேள்வி என்பது வள்ளுவம் (குறள் 87,88)" என்றெழுதுவார்.

ஆம்; விருந்தோம்பலையே வேள்வியாக - வேள்வி - எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். "விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இத்துணை யளவென்பதாக ஒன்றில்லை. விருந்தினரின் தகுதியளவே அளவாகும்" எனும் பொருள்பட.

இணைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் (விருந்தோம்பல்,87)

எனவும்,

"விருந்தினரை யோம்பி, அவ்வோம்பலாகிய வேள்வியில் ஈடுபாடு கொள்ளாதவர், ஈட்டிய பொருளை வருந்தியும் காத்து யாம் போற்றுவாரற்றோம் என வருந்துவர்" என்னும் பொருள்பட,

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்" (விருந்தோம்பல்,88)

எனவும் குறள் யாத்தமைக்கின்றார்.

இதனின்றும், அவிசொரிதலாகிய வேள்வியை மட்டும் வேள்வி என்னாது, "குறிக்கோளுடன் ஒன்றை நிறைவேற்றலே வேள்வியாம்" எனவும் வேள்வியில் உயிர் செகுத்து அதன் ஊனை உண்ணல் ஆகாதெனவும் கொள்கின்றோம்.

ஆகவே, பரிமேலழகர் வேள்விப் பயனினும் ஒன்றன் உயிரைக் கொன்று உடலினை உண்ணாமையின் பயனே பெரிது (259, விளக்கவுரை) என வேள்வியை ஒதுக்காது, வேள்வி செய்தாலே மழை பெயல் ஒல்லும் என வலியுறுத்துதலை (560, விளக்கவுரை) மறுத்து, வேள்வி செய்தலால் ஒன்றன் உயிரைச் செகுத்து அதன் உடம்பை உண்ணாமையே உயரிய அறமெனக் கொள்வோமாக.

தஞ்சாவூர், உலகத் திருக்குறள் பேரவையும் சாகித்திய அகாதெமியும்

இணைந்து நடத்திய

திருக்குறள் கருத்தரங்க நிகழ்வு

"இன்றைய வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் திருக்குறள் கூறும் தீர்வுகள்" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு நிகழ்வு திருவள்ளுவராண்டு 2039, புரட்டாசி மாதம் 30 (16.10.2008) தஞ்சாவூர், பெசண்ட் அரங்கில் நடைபெற்றது.

கருத்தரங்க நிகழ்வு தொடர்பாக திருக்குறள் கண்காட்சி நடைபெற்றது. தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவையின் தலைவர் செ.ப. அந்தோணிசாமி அவர்கள் காலை 9.00 மணிக்கு கண்காட்சி அரங்கினைத் திறந்து வைத்தார்கள். திருக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய உரைநூல் முதலாக இன்றுவரை எழுதப்பட்டுள்ள உரை, மரபுரை, விளக்கவுரை, தெளிவுரை தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் விளக்கவுரை உட்பட பல ஆசிரியர்களின் நூல்கள் இடம்பெற்றிருந்தன. மேனாட்டு அறிஞர்களின் திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களும் இடம் பெற்றிருந்தன. திருக்குறள் விளக்க அட்டைகள், ஓவியங்கள் நெஞ்சத்தை கவர்வதாகக் கண்காட்சி அமைந்திருந்தது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக பதிப்புத்துறையும் சரசுவதிமஹால் நூலகத் துறையும் அரங்கில் பங்கேற்று சிறப்பித்தன.

கருத்தரங்கின் தொடக்கத்தில் புலவர் க. திருநாவுக்கரசு தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட நிகழ்ச்சி தொடங்கியது. சாகித்திய அகாதெமி மண்டலச் செயலாளர் திரு. அ.சு. இளங்கோவன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். சாகித்திய ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு. இராம.குருநாதன் திருக்குறள் கருத்தரங்கினைக் குறித்து தொடக்கவுரை ஆற்றினார்கள். தலைவர் பொறுப்பேற்றிருந்த தமிழக வணிக வரித்துறை அமைச்சர் மாண்புமிகு சி.நா.மீ. உபயதுல்லா அவர்கள் திருக்குறளின் மாண்பினை உணர்ந்து குறள்நெறி நின்றால் என்றும் துன்பமில்லை -

"எல்லோரும் கொள்ள வேண்டியது வள்ளுவமே" என்று அருமையாக தலைமையுரை ஆற்றினார்கள். தொடர்ந்து குன்றக்குடி தவத்திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள் உரையாற்றும்போது, அரங்கமே உணர்வு வயப்பட்டு இருந்தது. நெஞ்சமெல்லாம் அன்பும், அருளும் நிறைந்திருக்க வேண்டும். பொறையும், ஈகையும் வாழ்க்கையின் அடிப்படை கோட்பாடு, வள்ளுவம் வையம் முழுவதும் பரவுமானால் வன்முறை ஒழியும். இன்ப அன்பு பெருகும். திருக்குறள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு மட்டுமல்ல; அதுவே திருவிளக்கு ஆகும். திருக்கழுக்குன்றம் அசோகனும், புஷ்பாஞ்சலியும் கொண்ட மனத்திட்பம் நல்லதொரு வினைத்திட்பம் இல்லையா? இதயேந்திரன் மறைந்தும் எல்லோரது நெஞ்சிலும் வாழவில்லையா? வள்ளுவர் "வழியே வாழ்க்கைக்கு ஏற்ற வழி" என்று மிகச் சிறப்பான வகையில் எழுச்சியுரை ஆற்றினார்கள்.

காலை 11.00 மணிக்கு பேராசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் "இன்றைய வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் திருக்குறள் தீர்வுகள்" என்ற தலைப்பில் கருத்தரங்க முதல் அமர்வு தொடங்கியது. தருமபுரம், பேராசிரியர் திரு.மு. சிவச்சந்திரன் அவர்கள் "வள்ளுவம் உலகத் திருமறையாகுமா?" என்ற தலைப்பிலும் மதுரை, பேராசிரியர் திரு. இரா. மோகன் அவர்கள் "இல்லறம் நல்லறம் ஆகுமா?" என்ற தலைப்பிலும் பொறியாளர் திரு. இரா. பாலகங்காதரன் அவர்கள் "அருவினை என்ப உளவோ?" என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

நண்பகல் உணவு இடைவேளைக்குப் பிறகு 3.00 மணிக்கு இரண்டாம் அமர்வு பேராசிரியர் திரு. இரா. கலியபெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முனைவர் அ.சு. இளங்கோவன் அவர்கள் "இரந்தும் உயிர்வாழ்தல் நீங்குமா?" என்ற தலைப்பிலும் திருவண்ணாமலை பேராசிரியர் திரு.கு. அரிகிருட்டிணன் அவர்கள், "கல்வி கண்ணெனத் தருமா?" என்ற தலைப்பிலும் பேராசிரியர் திரு.மு. இளமுருகன் அவர்கள் "வையகம் வானகம் ஆகுமா?" என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

காலை, மாலை அமர்வுகளில் பங்குபெற்ற பேராசிரியர்கள் அனைவரும், அவரவர்களும் வாழ்க்கை சிக்கலுக்குத் திருக்குறளே

தீர்வாக அமைந்துள்ள குறள்நெறியைச் சுட்டிக்காட்டி விளக்கமாகவும், சிறப்பாகவும் கருத்துக்களை எடுத்தியம்பினார்.

கருத்தரங்கத்தின் நிறைவாக தமிழ்க்கடல் திரு.இரா. இளங்குமரன் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்கள். "உலக மொழிகளில் தோன்றிய அற நூல்களின் தொகுப்பாகத் திருக்குறள் விளங்குவதால் குறள்நெறியே வாழ்க்கைக்கு நன்னெறியாகும்" என்று சிறப்பாக உரையாற்றினார். தஞ்சாவூர், உலகத் திருக்குறள் பேரவையின் செயலாளர் திரு.பழ. மாறவர்மன் நன்றி நவில கூட்ட நிகழ்வு 7.30 மணிக்கு முடிவுற்றது. காலை முதல் இரவு வரை வருகை தந்த பேராளர்கள் சோர்வு, தளர்ச்சியின்றி செவியின்பம் பெற்றார்கள்.

சாகித்திய அகாதெமியும், தஞ்சாவூர், உலகத் திருக்குறள் பேரவையும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்க நிகழ்வு, மாவட்ட மாநாடு போன்றே நிகழ்ந்தது என்ற செய்தி நெஞ்சமெல்லாம் இனிக்கத்தக்கது ஆகும்.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

சிந்தனை வட்டம்

தமிழரின் உணர்வைத் தட்டியெழுப்பிய தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் பொன்னுரை சிறப்பாயுள்ளது.

"இரண்டுவாரத்துக்குள் இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய முன்வரவேண்டும், இல்லாவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும்" என முடிவெடுத்து அறிவித்தும் இலங்கையில் போர்நிறுத்தம் செய்வதற்கான முயற்சியை மத்திய அரசு செய்யவில்லை எனவே முந்தைய முடிவின்படி, தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினால்தான் மத்திய அரசு போர் நிறுத்தத்துக்குத் தீவிரமான முயற்சியை மேற்கொள்ளும். தமிழகத்தின் குரலை மத்திய அரசு மதிக்கவில்லை. தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் குரலை இலங்கை அரசு மதிக்கவில்லை. விரைவில் ஈழத்தமிழர்க்கு மாநிலச் சுயாட்சியைப் பெற்றுத்தர மத்திய அரசும், தமிழக அரசும் தீவிரமாக முயல வேண்டும்.

தவத்திரு பொன்னம்பல அடிகளாரின், "மானுடம் வென்றது" என்ற புதுக்கவிதை மிகச்சிறப்பாயுள்ளது.

"அன்பு இல்லாத அறிவு ்ருள்!
அன்பும், அறிவும் இணைந்தால் அருள்!"

பாராட்டுகள்!

"பொதுநலனுக்காக எதையும் தியாகம் செய்யும் – எதையும் விட்டுக் கொடுக்கும் தூய பண்பு முகிழ்க்க வேண்டும்" என்பது பொன்னம்பல அடிகளார் அருளியுள்ள அருளுரை.

மகாவித்துவான் அருணை வடிவேல் முதலியாரின் கட்டுரை தமிழ் அருச்சனையை நன்கு வலியுறுத்துகிறது.

"ஆரியம் கடவுள் வழிபாட்டிற்கென்றே அறிஞர்களால் படைக்கப்பட்டது என்பதில் துளியும் உண்மையில்லை" எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழாகரர் தெ.முருகசாமி அவர்களின் "அருளாலய அரிசி" என்ற தலைப்பிலுள்ள விருத்தப்பாக்கள் சிறப்பாயுள்ளன. அதில் வரும் பிடியரிசித்திட்டத்தை நான் பயன்படுத்தி 1957 முதல் 1960 வரை இலவச மதிய உணவைச் சிறப்பாக வழங்கினேன். அது காமராசர் ஆட்சிக் காலம். 10 பைசா மதிப்பீட்டில் உணவு தரவேண்டும். (கஞ்சிதான் தர இயலும்)

6 பைசா அரசு அளிக்கும். 4 பைசா நன்கொடையாகப் பெற வேண்டும். இதைப் பிடியரிசி திட்டத்தின் மூலம் பெற்றேன்.

"இறவாத இதயங் கொண்ட ஹரிதேந்திரன்" என்ற கட்டுரையில் திரு. சேதுபதி அவர்கள் சோகம், தியாகம், மாந்தநேயம், முதலியவற்றைச் சொல்லோவியமாக்கி, உள்ளத்தை உருக்கும் வகையில் 7 பக்கங்களில் படைத்துள்ளனர். அத்துடன் நூற்றாண்டுகாணும் பேரறிஞர் மா.பெ.தூரன் அவர்களைப்பற்றிய சிறந்த கட்டுரையும் விரிவாகவும், விளக்கமாகவும் வழங்கியுள்ளார். அவருக்குப் பாராட்டுக்கள்! அந்தக் கட்டுரை மூலம் திரு.பெ.தூரன் அவர்கள் தான் பொங்கல் வாழ்த்து அனுப்பும் வழக்கத்தைத் தொடங்கினார் என்பதை அறிந்துகொண்டேன். (மற்றும் பலரும் அறிந்துகொண்டிருப்பர்) அந்தக் கட்டுரை நேற்று (23.11.2008) காலை நடந்த வே.வா. திருப்பத்தூர் தமிழ்மன்றக் கூட்டத்தில் படிக்கப்பட்டது.

"தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் திருக்குறள் பணிகள்" பற்றிச் சிறப்பாகக்கட்டுரை வழங்கியுள்ள புலவர். வீ.செ. கந்தசாமி அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

– புலவர். ச.மு. விமலானந்தன்

கார்த்திகை மாத மக்கள் சிந்தனை இதழைப் படித்தேன். ரசித்தேன். குழந்தைகள் நலம் காப்போம் என்கிற கட்டுரையில் கேரளாவில் உயர்கல்வியைவிட தொடக்கக் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யும் தகவல் சிந்திக்கத்தக்கது.

மேதகு நீதியரசர் V. ராமசுப்பிரமணியனாரின் கட்டுரையில் மண்டைக்காடு பற்றிய தங்களது அரிய கவிதையை எடுத்துக்காட்டியது அருமை!

ஜார்ஜ் அடிகளாரைப் பற்றிய நினைவுக்கட்டுரை மிக நன்று. மேலட்டையில் நேருவின் படமும், குழந்தைகள் தினவிழா புகைப்படமும் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

புவலர் ச.மு. விமலானந்தனின் கட்டுரையில் காணும் 2 பாடல்கள் அருமை. குன்றக்குடி ஆதீனத்தில் நடைபெற இருக்கும் முக்கிய விழாக்களின் விபரத்தை மக்கள் சிந்தனையில் முன்கூட்டியே பிரசுரித்தால் மிக நல்லது.

–காசி.ஸ்ரீ. தெய்வேந்திரன்.

புழுவாய் ஊர்ந்தோம்!

(காவியக் கவிஞர். **வண்ணைப்பூங்காவாசன்**)

வேற்றுமொழிக் காரனிடம் நாமோர் ஊமை;
வேகமற்ற வீணரிடம் நாடே ஆமை;
காற்றடிக்கும திசைஏகும் மனித வேடம்;
கடல்மீது போகுதய்யா ஓட்டை ஓடம்!
வேற்றுமையின் முழக்கங்கள் தேய்ந்த லாடம்,
வேரறுக்க வேண்டுமடா ஓய்ந்த மூடம்,
ஏற்றதொரு ஆற்றலாளர் எண்ணி, யாண்டும்
எடுத்தியம்பிப் போற்றுகின்ற மனிதம் வேண்டும்!


மதியற்ற மாந்தரினால் வளரும் களைகள்,
மணம்பரப்பும் மனிதநேயம் அழியும் முளைகள்,
கதியற்றோர் வாழ்வுக்கு விடியல் தேடும்,
கருத்துக்கு வலிவூட்ட ஏடும் பாடும்!
புதியதொரு கிளர்ச்சிகளின் அணிவகுப்பை
புலர்கின்ற மறுமலர்ச்சிக்கு கனிவு கூட்டும்!
நதிவெள்ளம், குளிர்தென்றல் இன்பம் காட்டும்
நரம்பற்ற நாவாலே மறுப்பார் உண்டா?.....

முயல்வேகச் செயல்மறந்து முடமாய்க் கிடந்து,
முன்னேற்றம் காணாத இடமாய்ப் படர்ந்து,
அயலவனின் அடிமையென உரிமை இழந்து,
ஆறறிவே இல்லாமல் உடலால் வளைந்து
கயல்போல நீருக்குள் நாளும் நெளிந்து
காதறுந்த ஊசியென ஓரம் ஒதுங்கி,
வியப்பான விந்தைகளை உள்ளம் துறந்து,
விரியுலகில் வாழ்வதிலே பயனென் கண்டோம்!

உதயத்தைக் காண்பதற்கே கண்கள் சோர்ந்தோம்;
உயரத்தை எட்டுதற்கும் புண்ணாய் நேர்ந்தோம்;
இதயத்தைத் தொலைத்துவிட்டுத் தேடி ஓய்ந்தோம்;
இன்றளவும் விலையாகி ஓடி வாழ்ந்தோம்!
கதையான சாதிமதப் புதைகுழி வீழ்ந்தோம்;
காலமெல்லாம் மருட்சியைத்தான் கற்றுத் தேர்ந்தோம்!
புதையலெனப் பழமையிலே நாமும் சேர்ந்தோம்;
புத்தெழுச்சி கொள்ளாமல் புழுவாய் ஊர்ந்தோம்!

உ
சிவமயம்





அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்





சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI - December 2008 Price Rs. 5-00
Date of Publication 20-12-2008
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு அருள்திரு
ஆதீனகர்த்தர்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி – வழி
அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166